www.freetnbooks.com

V6T

விருதுநகர் மாவட்டம்

தொகுத்தறித் தேர்வு - 2025

-----

வகுப்பு 6

காலஅளவு: 2.00 மணிநேரம் **தமிழ்** மதிப்பெண்கள்: 60

## பகுதி - I

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 10×1=10**

1) கூடு கட்டுவதற்கு மரம் கிடைக்காத பறவைகள் ........... வேறிடம் சென்றன

அ) பதிலிகளாக ஆ) ஏதிலிகளாக இ) விருந்தாளிகளாக ஈ) பயணிகளாக

2) நாம் .......... சொல் படி நடக்க வேண்டும்

அ) இளையோர் ஆ) ஊரார் இ)வழிப்போக்கர் ஈ) மூத்தோர்

3) கல்வியானது நமது ............ துணையாய் அமைகிறது.

அ) ஆவிக்குத் ஆ) கண்ணுக்குத் இ) உடலுக்குத் ஈ) செவிக்குத்

4) காடு + ஆறு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ..........

அ) காட்டாறு ஆ) காடாறு இ) காட்டுஆறு ஈ) காடு ஆறு

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக**

5) இந்தியாவின் பறவை மனிதர் ..........

6) நாம் சிந்திக்கவும் சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுவது ...........

**இ) பொருத்துக**

7) விளைவுக்கு - பால்

8) அறிவுக்கு - வேல்

9) இளமைக்கு - நீர்

10) புலவர்க்கு - தோள்

## பகுதி - II

**ஈ) ஓரிரு சொற்களில் விடையளிக்க. (எவையேனும் ஐந்து வினாக்கள் மட்டும்) 5×2=10**

11) தூக்கணாங்குருவியின் கூடுகளைக் கவிஞர் ஏன் புல் வீடுகள் என்று குறிப்பிடுகிறார்?

12) நாம் எவ்வாறு வாழ்ந்தால் பெருமை பெறலாம்?

13) வலசையின் போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள் யாவை?

14) காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் யாவை?

15) மெய்யெழுத்துகளை மூவகை இனங்களாக வகைப்படுத்தி எழுதுக

16) வகர வரிசையில் மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் யாவை?

17) அன்பிலார், அன்புடையார் செயல்கள் யாவை?

**உ) ஓரிரு சொற்களில் விடையளிக்க. (எவையேனும் மூன்று வினாக்கள் மட்டும்) 3×4=12**

18) சமூக வளர்ச்சிக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு யாது?

19) கல்லாதவருக்கு ஏற்படும் இழப்புகளாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?

20) அஃறிணை, பாகற்காய் ஆகிய சொற்களின் பொருள் சிறப்பு யாது?

21) பறவை இனங்கள் அழியாமல் காப்பாற்றப்பட நாம் செய்ய வேண்டியவை பற்றிச் சிந்தித்து எழுதுக

22) சார்பெழுத்துகள் எத்தனை? அவை யாவை?

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner

www.freetnbooks.com


## பகுதி - III

**ஊ) மனப்பாடப்பகுதி (அடிபிறழாமல் எழுதுக)** **4+2=6**

23) 'அருளைப் பெருக்கி' எனத் தொடங்கும் கா.ப.செய்குதம்பிப் பாவலரின் பாடலை எழுதுக

24) 'ஈன்ற பொழுதின்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

## பகுதி - IV

**எ) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி** **5×2=10**

25) **கீழ்க்காணும் சொற்களில் உள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக**

அ) கவிதை ஆ) பதிற்றுப்பத்து

26) **தொடர்களைப் பிரித்து இரண்டு தொடர்களாக எழுதுக**

அ) கபிலன் வேலை செய்ததால் களைப்பாக இருக்கிறான்

ஆ) இலக்கியா இனிமையாகப் பாடியதால் பரிசு பெற்றாள்

27) **வரிசை மாறியுள்ள சொற்களைச் சரியான வரிசையில் அமைத்து எழுதுக**

அ) கற்க போற்றிக் கல்வியைப் வேண்டும்

ஆ) மிகப்பெரிய சாண்டியாகோ மீனைப் பிடித்தார்

28) **தொடர்களை நீட்டித்துப் புதிய தொடர்களை உருவாக்குக**

மழை பெய்தது

29) **பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக**

அ) இனிய ........... இன்னாத கூறல்
கனியிருப்பக் ........... கவர்ந் தற்று

ஆ) அன்பிலார் ............... தமக்குரியர் அன்புடையார்
........... உரியர் பிறர்க்கு

30) **சொற்றொடர் அமைத்து எழுதுக**

அ) நாள்தோறும்

ஆ) வெளிநாடு

31) **படிப்போம்; பயன்படுத்துவோம்!**

அ) Touch Screen

ஆ) Sanctuary

## பகுதி - V

**ஏ) ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க** **1×6=6**

32) 'கிழவனும் கடலும்' என்னும் படக்கதையை உங்கள் சொந்த நடையில் கதையாக எழுதுக

33) அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக

**ஐ) ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க** **1×6=6**

34) விடுப்பு விண்ணப்பம் - கடிதம் எழுதுக

35) 'இயற்கையைக் காப்போம்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக

\- - - - - -

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner